03 செப்டம்பர் 2021

அன்புள்ள ஒன்ராறியோப் பெற்றோர்களே,

உங்கள் கோடை காலம் மிக நன்றாக இருப்பதாக நாம் நம்புகின்றோம். இந்த செப்டம்பரில் பாடசாலைக்கு நேரில்-சென்று கற்றலை மீண்டும் தொடங்கும்போது, மாணவர்கள் மிகவும் வழமையான கற்றல் அனுபவத்திற்காக -அவர்களின் நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் வகுப்புக்குத் திரும்புவதைப் பார்ப்பதற்கு நாங்கள் ஆவலாக இருக்கின்றோம். எமது இளைஞர்களின் மனநலம், உடல் ஆரோக்கியம், கல்விச் சாதனை மற்றும் ஒட்டுமொத்தமான நல்-வாழ்வுக்குப், பாடசாலைக்கு நேரில்-சென்று கற்றல் அவசியம் என்பதை நாம் அறிவோம்.

மாகாணத்தின் முதன்மை மருத்துவ அதிகாரி உட்பட மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, மாகாண அறிவியல் அட்டவணை அறிக்கையின் மீளாய்வின் படி, நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள், பாடசாலையில் இருக்கும்போது மாணவர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

2021-22 கல்வி ஆண்டில், மாகாணம் முழுவதிலும் உள்ள மாணவர்கள்:

- ஒத்திசைவான தொலைதூரக் கற்றல் முறை ஒரு தெரிவாகத் தொடர்ந்து கொண்டிருந்தாலும், முழுநேரக் கல்விக்காக நேரில்-சென்று கற்பதற்குப் பாடசாலைக்கு மீண்டும் செல்வர்;
- வகுப்பறைகளில், தனிநபர் இடைவெளி தூரம் மற்றும் மேம்பட்ட சுத்தம் ஆகியவற்றைக் கடைப்பிடித்த வண்ணம் கற்றுக்கொள்வர்;
- பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள், கழகங்கள், இசை மற்றும் கலைகள், அத்துடன் பாடசாலைக்குள்ளேயே முழு அளவிலான விளையாட்டுகள் மற்றும் சில மாற்றங்களுடன் பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி செயற்பாடுகளில் பங்கேற்க முடியும்; மற்றும்
- அனைத்து மழலையர் பாடசாலை வகுப்பறைகளிலும், மற்றும் இயந்திரக் காற்றோட்ட அமைப்புகளுடன் இணைக்கப்படாத கற்றல் இடங்கள் அனைத்திலும், HEPA சாதனங்கள் உட்பட

மேம்படுத்தப்பட்ட மற்றும் தரமான காற்றோட்டத்துக்காக உருவாக்கப்பட்ட பிற உட்கட்டமைப்புகள் மூலம் பயனடைவர்.

இத்திட்டத்தின் மேலதிகமான விவரங்கள் இங்கே கிடைக்கின்றன Ministry of Education’s website.

அத்துடன் எமது அரசு, பொது சுகாதாரப் பிரிவுகள் மற்றும் பொது நிதியுதவி பெறும் பாடசாலைச் சபைகளுடன் இணைந்து தன்னார்வத் தடுப்பூசிக் கிளினிக்குகளை அவ்விடங்களில் அல்லது அருகிலுள்ள பாடசாலைகளில் அமைத்து COVID-19 க்கு எதிராகப் போராடத் திட்டமிட்டுள்ளது. பாடசாலைத் தொடக்கத்துக்கு முன்னராகவும், பாடசாலையின் முதல் சில வாரங்களுக்கும் கிளினிக்குகள் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டம் முதலாவது அல்லது இரண்டாவது டோஸைப் பெறாதவர்களை இலக்காகக் கொண்ட மாகாணத்தின் கடைக்கல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். மேலும் இந்த இலையுதிர் காலத்தில் பாடசாலைக்குத்.திரும்பும் தகுதி வாய்ந்த மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும், கல்வியாளர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்களுக்கும் தன்னார்வமாகத் தடுப்பூசிகளைப் பெறக்கூடிய வசதியான அணுகலை இது வழங்கும்.

மாணவர்களின் மனநல ஆதரவுகளுக்காக $80 மில்லியனுக்கும் அதிகமான நிதியுதவியை நாம் அர்ப்பணிக்கின்றோம். இது முன்னைய அரசாங்கத்தின் கீழ் 2017-18 இல் செய்யப்பட்ட முதலீடுகளை விட நான்கு மடங்கு அதிகம்.

ஒன்ராறியோவின் பாடசாலைக்கு மீண்டும் திரும்பும் திட்டத்தை இயலுமானவரைப் பாதுகாப்பானதாக ஆக்குவது குறிப்பிடத்தக்க முதலீடுகளால் ஆதரிக்கப்படுகின்றது, இதில் $1.6 பில்லியனுக்கும் அதிகமான தொகை  COVID-19 ஆதரவுகளுக்கும், $85.5 மில்லியன் தொகை தொற்றுநோய் உருவாக்கிய கற்றல் இடைவெளிகள் எதனையும் மாணவர்கள் சமாளிக்க உதவுவதற்காகக் கற்றல் மீட்சி மற்றும் புதுப்பித்தலுக்கு உதவுவதையும் இலக்காகக் கொண்டவை.

பாடசாலைகளில் காற்றின் தரத்தை மேம்படுத்துவது, COVID-19 இலிருந்து பாடசாலைச் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு மிக முக்கியமானதாகும். அதனாலேயே தொற்றுநோய்ப் பரம்பல் காலத்தில் புதிதாக வளர்ந்து வரும் அறிவியல் ஆலோசனையைப் பின்பற்றிப்

பாடசாலைக் காற்றோட்ட அமைப்புகளை மேம்படுத்துவதற்காக எமது அரசாங்கம் $600 மில்லியனுக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்துள்ளது என்பதில்  நான் பெருமைப்படுகின்றேன்.  இத்தொகை HVAC மற்றும் ஜன்னல்கள் உட்படப் பாடசாலை வசதிகளைப் புதுப்பிப்பதற்காகப் பாடசாலைச் சபைகளுக்கு வருடாந்த நிதியுதவியாக நாம் வழங்கும் $1.4 பில்லியனுடன் சேர்த்து மேலதிகமாகக் கொடுக்கப்படுகின்றது.

ஒன்ராறியோவில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் அனைத்து சபைகளிலும் காற்றோட்ட அமைப்பில் மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, வகுப்பறைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக, 70,000 க்கும் மேற்பட்ட HEPA வடிகட்டும் சாதனங்கள் மற்றும் பிற காற்றோட்ட சாதனங்களை நாம் வழங்கியுள்ளோம்.

இயந்திரக் காற்றோட்ட அமைப்பு உள்ள பாடசாலைகளில் காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கு, மிக உயர்ந்த தர வடிப்பான்களைப் பயன்படுத்துமாறு நாம் சபைகளுக்கு அறிவுறுத்துகின்றோம் – இயலுமான இடத்தில் MERV-13 – அடிக்கடி வடிகட்டிகளை மாற்றவும், காற்று அமைப்புகளை நீண்ட நேரம் இயக்கவும், அதிகபட்சக் காற்றோட்டம் மற்றும் புதிய காற்றை உட்கொள்ளும் திறன் ஆகியவற்றுக்காக HVAC அமைப்புகளைச் சரிபார்க்கவும்  ஜூனியர் மற்றும் சீனியர் மழலையர் பாடசாலையில் படிக்கும் எமது மிகவும் இளைய மாணவர்களுக்கு –    பாடசாலையில் இயந்திரக் காற்றோட்ட அமைப்பு இருக்கின்றதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் – ஒரு கூடுதல் பாதுகாப்பு அம்சமாக,  அவர்களின் வகுப்பறைகளுக்குத் தனியாக ஒரு HEPA வடிப்பானை நாம் வைக்கின்றோம். வெளிப்படைத்தன்மையின் நலன் கருதி, பாடசாலைச் சபைகளுக்குக் காற்றோட்ட  அமைப்பு மேம்பாடுகள் குறித்த தரப்படுத்தப்பட்ட பொது அறிக்கை சாதனம் ஒன்றினை நாம் வழங்குவோம்.

மாணவர்களின் பாதுகாப்பு, நல்-வாழ்வு மற்றும் கல்வித் தேர்ச்சி ஆகியவை முன்னிலையிலும் மையமாகவும் இருப்பதனை உறுதி செய்ய உதவுமுகமாகக், கல்வித்துறை மற்றும் மருத்துவ நிபுணர்களுடன் எமது அரசாங்கம் தொடர்ந்து நெருக்கமாகப் பணியாற் றி வரும். அந்த உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, சுகாதாரத் தலைமை மருத்துவ அதிகாரி

அலுவலகம்மேம்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களை, உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவுகளுக்கு COVID-19 தொற்றுகள், தொடர்புகள் மற்றும் பரம்பல்களைக் கையாள்வதற்கென வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள் பாடசாலை அமைப்புகளில் COVID-19 ஐக் கையாள்வது தொடர்பான முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியது, இதில் அறிகுறிகளைக் கொண்ட நபர்களைக் கையாள்வதற்கான வழிகாட்டுதல், சாத்தியமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுகள் அத்துடன் சந்தேகத்திற்கிடமானதும் உறுதிப்படுத்தப்பட்டதுமான நோய்ப்பரம்பல்கள் ஆகியன உள்ளடங்கும்.

எமது தடுப்பூசி நடவடிக்கை தொடர்கின்றது. COVID-19 மற்றும் உருமாறும் அதன் வகைகளுக்கு எதிரான தடுப்பூசிகளே எமது சிறந்த பாதுகாப்பு, மேலும் நமது மாணவர்கள், நம் அன்புக்குரியவர்கள் மற்றும் நமது சமூகங்களை நோயிலிருந்து பாதுகாக்க அவை உதவும். மேலும் ஒன்ராறியோவின் கல்வி அமைச்சராக (Minister of Education), மாகாணத்தின் மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பெற்றோரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு எனது முன்னுரிமை எப்போதும் இருக்கும். I மிகச் சவாலான சில காலங்களில் நீங்கள் காட்டிய பொறுமை மற்றும் சகிப்புத் தன்மைக்கு உங்கள் அனைவருக்கும் நன்றி. நம்முடைய நேர்மறையான உத்வேகத்தைத் தொடர்வோம் மற்றும் நம் குழந்தைகள் தமக்கு மிகத்-தகுதியான, மிகவும் வழமையான கல்வி ஆண்டை மகிழ்வுடன் தொடரும்போது அவர்கள் பாதுகாப்பாக இருப்பதனை உறுதி செய்ய நாம் ஒருமித்துப் பணியாற்றுவோம்.

அனைவரும் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் பாடசாலைக்கு மீண்டும் செல்ல  நான் வாழ்த்துகின்றேன்.

உண்மையுள்ள,

The Honourable Stephen Lecce
கல்வி அமைச்சர்